அசல் வழக்கு எண்.45/2021 நாள்: 10.11.2025

வா.சா.1 திரு. சம்மந்தமூர்த்தி

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. வழக்கில் உள்ள நிலங்கள் கோவிலுக்கு சொந்தமான நிலம் என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு எனது தாத்தா சிங்காரவேலு கொத்தபிரார் குத்தகைதாரராக இருந்தார் என்றால் சரிதான். அவர் குத்தகை உரிமையை எனக்கு உயில் மூலம் எழுதி வைத்திருந்தார் என்றால் சரிதான். அந்த உயில் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். அந்த உயில் அடிப்படையில் தான் என்னை குத்தகை உரிமை பதிவேட்டில் பதிவு செய்யுமாறு கோரி இருந்தேன் என்றால் சரிதான், நான் குத்தகை சாகுபடி செய்து வந்ததால் அவ்வாறு கோரினேன்.

2. நான் எந்த வருடத்திலிருந்து சாகுபடி செய்கிறேன் என்றால் 17.10.1994 முதல் சாகுபடி செய்கிறேன். 1994 முதல் தற்போது வரை நான் சாகுபடி செய்வதற்கான அடங்கல் என்வசம் உள்ளதா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் கருவை முளைத்துள்ளதா என்றால் 2 ஆண்டுகளாக சாகுபடி செய்யவில்லை. சாகுபடி செய்ய முடியாத இடங்களில் கருவை முளைத்துள்ளது. குத்தகை சாகுபடி பதிவேட்டில் எந்த வருடம் பதிவு செய்ய முயற்சித்தேன் என்றால் 1994 ல் முயற்சித்தேன். எனது அப்பாவிற்கு எதிராகவும் எனது சகோதரருக்கு எதிராகவும் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பாக பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

3. தாவா சொத்திலிருந்து வெளியேற்றுவதற்கான நடவடிக்கையை அருள் ஜம்புகேஸ்வரர் அகிலாண்டேஸ்வரி கோவில் நிர்வாகம் எடுத்தார்களா என்றால் குத்தகை பாக்கி கேட்டு நோட்டிஸ் கொடுத்தார்கள் பணத்தை செலுத்திய பிறகு நடவடிக்கை எடுக்கவில்லை. நான் சொல்வது தவறு எனக்கு எதிராக தாவா சொத்திலிருந்து வெளியேற்றுவதற்கான உத்தரவினை தஞ்சாவூர், வருவாய் நீதிமன்றம் 02.02.2018 அன்று பிறப்பித்துள்ளது அது வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.14 ல் எனக்கு எதிராகவும் எனது தந்தைக்கு எதிராகவும், உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு எதிராக உத்தரவில் உள்ளது. 1வது நபர் யார் என்றால் தங்கராஜ் கூத்தபிரான் என உள்ளது அவர் யார் என்று எனக்கு தெரியாது.

4. மேற்படி வா.சா.ஆ. 14 ல் இரண்டாவது நபராக உள்ள எனது பெயருக்கு தகப்பனார் பெயர் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தங்கராஜ் கூத்தபிரான் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனது அப்பா பெயர் என்ன என்றால் தியாகராஜ் கொத்தபிரார் ஆகும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.12 மற்றும் வா.சா.ஆ.13 ல் எனது அப்பா பெயர் தங்கராஜ் கூத்தபிரான் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 ல் எஸ். தியாகராஜ கொத்தபிரார் த/பெ. சிங்காரவேலு கொத்தபிரார் என்று உள்ளது என்றால் சரிதான். எனது தாத்தா காலத்திற்கு பிறகு எனது அப்பா தான் தாவா சொத்தை குத்தகைக்கு சாகுபடி செய்து வந்தார் என்றால் சரியல்ல.

5. எனது அப்பா காலத்திலேயே தாவா சொத்து சாகுபடி செய்யாமல் 15 வருடங்களாக தரிசாக உள்ளது என்றால் சரியல்ல. சாகுபடி செய்யாமல் இருந்ததால் தான் கோவில் நிர்வாகம் எனது அப்பாவை வெளியேற்றுவதற்கான உத்தரவை பெற்றது என்றால் சரியல்ல. நான் குத்தகை செலுத்தி வந்ததாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.16 என்பது எனது தந்தையார் மற்றும் எனது சகோதரருக்கு தெரியாமலேயே பெறப்பட்ட உத்தரவு என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தங்களது தந்தையார் செலுத்தவேண்டிய குத்தகை பாக்கியை செலுத்த தயாராக இருப்பதாகவும் தங்கள் பெயருக்கு குத்தகையை பதிவு செய்து கொடுக்கும் படி எனது தந்தையாரின் ஒப்புதலுடன் கொடுக்கப்பட்ட விண்ணப்பத்தின் பேரில் கோவில் நிர்வாகம் செயல்படுவதை தடுக்க இந்த வழக்கு என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

ம.வி. இல்லை.

S.d/Sampanthamoorthy

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2025.11.10 18:40:10 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU